பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 09 2024 **SUNDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மன்-கி-பாத் நிகழ்ச்சியில் இடம்பெறும் கருத்துக்களை ஊடகங்கள் இயக்கமாக மாற்றியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஜம்மு கஷ்மீர் சட்டப்பேரவைக்கு மூன்றாவது மற்றும் இறுதிகட்டமாக நாளை மறுநாள் தேர்தல் நடைபெறவுள்ள 40 தொகுதிகளில் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

3. தமிழகத்தில் திரு. செந்தில் பாலாஜி, டாக்டர் கோவி. செழியன், திரு. ராஜேந்திரன், திரு. நாசர் ஆகியோர் இன்று பிற்பகல் அமைச்சர்களாக பதவியேற்கின்றனர்.

4. நேபாளத்தில் மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

5. உலக ஜூனியர் துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில், இந்தியா, இரண்டு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

மன்-கி-பாத் நிகழ்ச்சியில் இடம்பெறும் கருத்துக்களை ஊடகங்கள் இயக்கமாக மாற்றியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மன்-கி-பாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்ச்சியின் வெற்றிக்காக, தூர்தர்ஷன், பிரஸார் பாரதி மற்றும் அகில இந்திய வானொலியில் தொடர்புடைய அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

//(சவுண்ட் பைட் - மோடி-மன்கிபாத் (1) 82 செகண்ட்ஸ்)//

நீர் சேமிப்பின் அவசியத்தை மழைக்காலம் நமக்கு அறிவுறுத்துவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

//(சவுண்ட் பைட் - மோடி-நீர் சேமிப்பு (2) 28 செகண்ட்ஸ்)//

தூய்மை இந்தியா இயக்கம் பெரிய அளவில் வெற்றி பெற்றிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அன்னையின் பெயரில் ஒரு மரம் இயக்கத்தில் அனைத்து தரப்பினரும் ஆர்வத்துடன் பங்கேற்று வருவதாக திரு. நரேந்திர மோடி கூறினார்.

// (சவுண்ட் பைட் - மோடி-ஒரு மரம் (3) 66 செகண்ட்ஸ்) //

தமிழகத்தின் மதுரையைச் சேர்ந்த சுபஸ்ரீ, ஏற்படுத்தியுள்ள மூலிகைப் பூங்காவானது, நமது கடந்த காலத்தை, வருங்காலத்தோடு இணைப்பதாக பிரதமர் கூறினார்.

//(சவுண்ட் பைட் - மோடி-மூலிகை (4) 75 செகண்ட்ஸ்)//

பண்டிகை காலங்களில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

வரும் நாட்களில் பண்டிகை காலம் தொடங்கவுள்ளதை சுட்டிக்காட்டி, நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. நரேந்திர மோடி, கூறினார்.

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

இதற்கிடையே, மன்கிபாத் நிகழ்ச்சியில், பிரதமர் தம்மைப் பற்றி குறிப்பிட்டுப் பேசியது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று மதுரையைச் சேர்ந்த ஆசிரியர் திருமதி. சுபஸ்ரீ எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

//(சவுண்ட் பைட் - சுபஸ்ரீ 70 செகண்ட்ஸ்)//

>>>>><<<<<

ஜம்மு கஷ்மீர் சட்டப்பேரவைக்கு மூன்றாவது மற்றும் இறுதிகட்டமாக நாளை மறுநாள் தேர்தல் நடைபெறவுள்ள 40 தொகுதிகளில் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

ஜம்மு மண்டலத்தில் 24 தொகுதிகளிலும், கஷ்மீர் மண்டலத்தில் 16 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதற்கு தேவையான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாக்கு எண்ணிக்கை வரும் 8ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

>>>>><<<<<

தமிழக அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், துணை முதலமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

திரு. செந்தில் பாலாஜி, டாக்டர் கோவி. செழியன், திரு. ராஜேந்திரன், திரு. நாசர் ஆகியோர் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அமைச்சரவையிலிருந்து திரு. மனோ தங்கராஜ், திரு. செஞ்சி மஸ்தான், திரு. கே ராமச்சந்திரன் ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

புதிய அமைச்சர்கள் மூவரும் இன்று பிற்பகல் பதவியேற்றுக் கொள்கின்றனர்.

சிலரது இலாகாக்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

>>>>><<<<<

உலக இதய தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இதனையொட்டி, மாரடைப்பு உள்ளிட்ட இதயநோய்களை தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

>>>>><<<<<

சோமாலியாவில் நேரிட்ட இரட்டை குண்டுவெடிப்பு சம்பவங்களில் ஆறு பேர் உயிரிழந்தனர், 10 பேர் காயமடைந்தனர்.

**Mogadishu** மற்றும் **Shabelle** பகுதிகளில் இந்த குண்டுவெடிப்பு சம்பவங்கள் நேரிட்டதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>><<<<<

நேபாளத்தில் மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக, கடந்த 3 நாட்களில் மட்டும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 101ஆக அதிகரித்துள்ளது.

45க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

காத்மண்டு பகுதியில் மட்டும் 48 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

உலக ஜூனியர் துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில், இந்தியா, இரண்டு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

பெருவின் லிமாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின், ஆடவர் மற்றும் மகளிர் குழுப் பிரிவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

மகளிர் 10 மீட்டர் பிரிவில் **Kanak** வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<